# பிரச்னைக்கு தீர்வு காணாமல் மின் நுகர்வோர் இழுத்தடிப்பு

## அடம் பிடிக்கும் பொறியாளர்களுக்கு இன்று 'அர்ச்சனை'

– நமது நிருபர் –

புதிய மின் இணைப்பு வழங்குதல் உள்ளிட்ட பணிகளை, குறித்த காலத்தில், செய்து கொடுக்காமல், மின் நுகர்வோரை இழுத்தடிக்கும், பொறியாளர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்க, மின் வாரிய உயர் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு மின் வாரியம், ஒன்பது மண்டலம், 37 மின் பகிர்மான வட்டங்களுடன் செயல்படுகிறது.

### ஆய்வு கூட்டம்

ஒன்பது மண்டலங்களில், முக்கியமான கருதப்படும், சென்னை வடக்கு; சென்னை தெற்கில், 27 லட்சம், மின் இணைப்புகள் உள்ளன.

இரு மண்டலங்களிலும், தலா, ஒரு தலைமை பொறியாளர், மூன்று மேற்பார்வை பொறியாளர், 15 செயற்பொறியாளர், 60 உதவி செயற்பொறியாளர், 120 உதவி பொறியாளர்கள் உள்ளனர்.

புதிய மின் இணைப்பு, மீட்டர் பழுது, தவறான மின் கணக்கீடு, மின்தடை உள்ளிட்ட பிரச்னைகளுக்காக, மின் நுகர்வோர், மின் வாரிய பொறியாளர்களை தொடர்பு கொள்கின்றனர்.

ஆனால், அவர்களின் பிரச்னைகளுக்கு, குறித்த காலத்தில், தீர்வு கிடைப்பது இல்லை.

இந்நிலையில், சென்னையில், இன்று, மின் வாரிய தலைமை அலுவலகத்தில், அதன் தலைவர் ஞானதேசிகன் தலைமையில், சென்னை வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில், மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து, ஆய்வு கூட்டம் நடக்கிறது.

இதில், மின் வாரிய இயக்குனர்கள், தலைமை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர்.

### அலைக்கழிப்பு

கூட்டத்தில், மின் நுகர்வோரின் குறைகளுக்கு தீர்வு காணாமல், அவர்களை அலட்சியப்படுத்தும், பொறியாளர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து, முடிவு செய்ய உள்ளனர்.

இதைதொடர்ந்து, விரைவில் நடக்க உள்ள, மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் ஆலோசனை கூட்டத்திலும், இதே போல் முடிவு எடுக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, எரிசக்தி துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சென்னையில், படித்தவர்கள், விஷயம் தெரிந்தவர்கள் அதிகம் வசிக்கின்றனர்.

அவர்கள், மின் வாரிய ஊழியர்களால், அலைக்கழிப்பு செய்வது அதிகரித்து வருகிறது. தலைநகரில், இந்த நிலை என்றால், கிராம மக்கள் படும் வேதனை, சொல்லி தெரிய வேண்டியதில்லை.

எனவே, எந்த செயற்பொறியாளர் அலுவலகங்களில், அதிக புகார்கள் வருகிறதோ, அதற்கு காரணமானவர்களை உடனடியாக இடம் மாற்றம் செய்ய முடிவு செய்து உள்ளோம்.

இவ்வாறு, அவர் கூறினார்.

### 'கடும் அதிருப்தி'

*மின் நுகர்வோர், மின்தடை குறித்து, புகார் தெரிவிக்க, தங்கள் பகுதியில் உள்ள, உதவி பொறியாளர்களை தொடர்பு கொண்டால், அவர்கள், போனை எடுப்பது கிடையாது. இதற்கு, செயற்பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் விதிவிலக்கல்ல.*

*இதுவே, மின் வாரியத்தின் மீது, பொதுமக்களிடம், கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.*

தினமலர் 16.9.14.